1982 பிப்ரவரி 17]

அரியலூரில் புவியியல் ஆய்வு அமைப்பின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் திட்டம்

* வினா எண் 238 திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கனிமவள படிவங்கள், தகவல் குறிப்புகள் பாசில்கள் (fasils) அடங்கிய ஜியாலஜிகல் இன்பர்மேஷன் சென்டர் ஒன்றை அரியலூரில் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; புதைப்படிவங்களை நிரந்தரமாக பாதுகாக்கும் பொருட்டு இந்திய புவியியல் ஆய்வு அமைப்பும், மாநில புவியியல் பிரிவும், கூட்டாக இணைந்து திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூருக்கு அருகில் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூருக்கு அருகில் ஜியாலஜிக்கல் இன்பர்மேஷன் சென்டர் அமைக்கும் இடம் எது என்பதை அறிய விரும்புவதுடன், அந்தப்பகுதியில் கல்லமேடு, வெட்டிப்பாளையம் காட்டுப்பிரிவும் கால்வாய் போன்ற இடங்களில், அரும்பொருள்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்த சென்டரை அரியலூரிலேயே அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன், அரியலூருக்கு அருகில் அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்று. அந்தப் பகுதியிலே அந்த மியூசியம் அமைக்கப்படும் போது, அதைச் சார்ந்திருக்கிற எல்லா பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகிற பொருள்கள் அந்த மியூசியத்திலே வைக்கப்படும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள கல்குவாரிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு குத்தகைக்கு விடும் திட்டம்

* வினா எண் 239 திரு. மு. அப்பாத்துரை மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான கல்குவாரிகளை தனி நபர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விடும் முறையை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமை வழங்கப்பட்டது உண்மையா?

(ஆ) இந்த முறை நீடிக்கப்படுமா?

[1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (அ) ஆம்

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புறம்போக்கு குவாரிகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு கடந்த மூன்று பசலிகளில் கிடைக்கப்பெற்ற குத்தகைத்தொகையினை சராசரித்தொகையை குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்து, குவாரிகளை 1390 பசலிக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் அரசு 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுரக கனிம விதிகள்படி வியாபார நோக்கத்துடன் ஒன்றியங்களுக்கு குவாரிகளை குத்தகைக்கு விட அதிகாரம் இல்லை. ஆதலால், மாவட்ட ஆட்சியாளர் புறம்போக்கு குவாரிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கிய உத்திரவை ரத்து செய்தும், ஊராட்சி ஒன்றியங்கள் விருப்பப்பட்டால் பொது ஏலத்தில் பங்கு பெறலாம் என்று அரசு ஆணையிட்டதற்குப் பிறகு இம்முறை கைவிடப்பட்டது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கமே இன்றைக்கு நம்முடைய நாட்டில் தன்னிறைவுத் திட்டம்போன்ற பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கான, அந்தக்குவாரிகளிலே இருந்து அந்தக் கற்கள் எல்லாம் பெறப்படுகின்றன. ஆகவே, கற்களினுடைய விலையை அதிகப்படுத்தி தனியார்கள் அதிகமாக இலாபம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மீண்டும் பரிசீலணைசெய்து அரசாங்கமே அந்தக் குவாரிகளை ஏற்று நடத்த ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான இடங்களில் சிதறிக் கிடக்கிற சிறுசிறு பகுதிகளை அரசே எடுத்து நடத்த இயலாது. ஊராட்சி ஒன்றியங்கள், தேவை என்றால், பொது ஏலத்தில் கலந்து கொண்டு, அவர்களும் பங்கு பெற்று, ஏலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி கல்குவாரி நடத்துகின்ற கிராமங்களில் தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களுக்கு இந்தக் குவாரிகளைக் குத்தகைக்கு விட அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்

1982 பிப்ரவரி 17]

[முற்பகல் 10.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவு செய்து கொண்டு அந்தச் சங்கங்கள் முன்வந்தால், அவைகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு யோசிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலே சுண்ணாம்புக்கல் தனியாக எடுக்கப்பட்டு, அதில் இருந்து ஏராளமான கனிம்புப் பொருள்கள் விரயமாவது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அவைகளை முறைப்படி குத்தகைக்கு விட, அவைகளை ஒழுங்குபடுத்தி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கேள்வி கல்குவாரியைப் பற்றியது. இருந்தாலும், லைம்ஸ்டோன்களைப் பொறுத்தவரையில், மூன்று வகையாக எடுக்கிறார்கள். ஒன்று பெரிய தொழிற்சாலைகளுக்கு எடுத்து அவர்கள் உபயோகிக்கிறார்கள். அடுத்து சிறிய தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் சென்று அவர்களும் உபயோகிக்கிறார்கள். மூன்றாவதாக தனிய கள் சிலர் குறைந்த அளவு எடுத்து வியாபாரம் செய்கின்றார்கள். இதிலே ஊராட்சி ஒன்றியங்கள் செய்வதற்கு எதுவுமில்லை அப்படி தேவை என்றால், அவர்கள் விண்ணப்பித்து, பொது ஏலத்திலும் பங்கு கொண்டு எடுக்கலாம், அல்லது சொசைட்டிகளின் மூலமாகவும் எடுக்கலாம். அந்த நிலை வரும்போது அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம் கட்டும் திட்டம்

* வினா எண் 240.—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம் புதியதாகக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடன் கட்டுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) வடாற்கா மாவட்டம் திருப்பத்தூரில் ஐம்பது பேர் தங்கும் ஆதிதிராவிட மாணவிகள் இல்லம் ஒன்று இயங்கி வருகிறது. இதற்காக புதிய கட்டிடம் இதுவரைக் கட்டப்படவில்லை. இதற்கான கருத்துக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

LEGISLATIVE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்